



admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்






| Vol: 03 | Issue: 84 | 4 Pages | 23.10.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 84 | 4 பக்கங்கள் | 23.10.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா**
**உவகையும் ஏதம் இறைக்கு**

**விளக்கம்:**
**பொருள் கொடாத தன்மையும் மாட்சியில்லாத மானமும், தகுதியற்ற மகிழ்ச்சியும் தலைவனாக இருப்பனுக்கு குற்றங்களாகும்.**

## 153 வேட்பாளர்களும் டெபாசிட் இழப்பார்கள்: பிரசாந்த் கிஷோரை தாக்கிய பா.ஜ.க.



பாட்னா, அக்.23

243 தொகுதிகளை கொண்டபீகார்சட்டசபைக்கு நவம்பர் மாதம் 6, 11 ஆகிய நாட்களில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. முதற்கட்டமாக 121 தொகுதிகளுக்கும், இரண்டாம் கட்டமாக 122 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 14ந்தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

பீகார் தேர்தலில், ஜன சுராஜ் கட்சி சார்பில் 153 பேர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டு உள்ளனர். இந்நிலையில் இதுபற்றி இன்று பேசிய பா.ஜ.க. மூத்த தலைவர் சஞ்சய் ஜெய்ஸ்வால், பிரசாந்த் கிஷோர் அவரை அரசியல் நிபுணராக நினைத்து கொள்கிறார். அவருடைய முக்கிய தலைவர்கள் யாரையும் தேர்தலில் அவர் நிறுத்தவில்லை. ஏனெனில், அவர்கள் போட்டியிட்டால், அவர்களின் டெபாசிட் பறிபோக கூடும்.

இந்த தேர்தலில் பிரசாந்த் கிஷோர் வரலாறு படைப்பார். அவருடைய 153 வேட்பாளர்களும் டெபாசிட் இழப்பார்கள். இதன்பின்னர், அது ஒரு வரலாற்று கட்சியாக மாறும் என கூறினார். பிரசாந்த் கிஷோர் நேற்று பேசும்போது, பீகார் சட்டசபை தேர்தலுக்கான போட்டியில் இருந்து ஜன சுராஜ் கட்சியின் வேட்பாளர்கள் 3 பேர் வாபஸ் பெற கட்டாயப்படுத்தப்பட்டு உள்ளனர்.

லாலுஜியின் பதவி காலத்தில் பூத்துகள் சூறையாடப்பட்டன. 2020 ச தேர்தலில் முடிவுகள் கொள்ளையடிக்கப்பட்டன. முதன்முறையாக வேட்பாளர்கள் கொள்ளையடிக்கப்படுகின்றனர் என கூறினார். மத்திய உள்துறை மந்திரி, மத்திய கல்வி துறை மந்திரி ஆகியோர் கூறுவதன் பேரில், பிற கட்சிகளை சேர்ந்த வேட்பாளர்கள் தங்களுடைய வேட்பு மனுக்களை வாபஸ் பெறுகிறார்கள் என பரபரப்பான குற்றச்சாட்டை கூறினார்.

கடந்த 3 முதல் 4 நாட்களில் எங்களுடைய கட்சியால் அறிவிக்கப்பட்ட 3 வேட்பாளர்கள் கட்டாயத்தின் பேரில், அவர்களின் வேட்பு மனுவை வாபஸ் பெற்றுள்ளனர். எங்களை அச்சுறுத்தும் சூழலை உருவாக்க பா முயற்சிக்கிறது என்றும் அவர் குற்றச்சாட்டாக கூறினார். இந்நிலையில், அவருக்கு பதிலளிக்கும் வகையில் பா.ஜ.க. மூத்த தலைவர் சஞ்சய் ஜெய்ஸ்வால் பேசியுள்ளார்.

## வானில் தோன்றிய 2 அரிய வால் நட்சத்திரங்கள்



புதுடெல்லி, அக்.23

விண்வெளியில் அவ்வபோது சில அதிசய நிகழ்வுகள் நடப்பதுண்டு, அதே போல் இந்த வாரம் 2 வால் நட்சத்திரங்கள் வானத்தில் தோன்ற இருக்கின்றன. ஸ்வான் மற்றும் லெம்மன் என்று பெயரிடப்பட்டுள்ள 2 வால் நட்சத்திரங்கள் பூமிக்கு அருகில் வர உள்ளன.

கடந்த வாரம் உத்தரகாண்ட் மாநிலம் உத்தரகாசி அருகே உள்ள தயாரா புக்யால் மலையேற்றப்பாதையில் வானவியல் ஆய்வாளர்களால் இந்த வால் நட்சத்திரங்கள் படம் பிடிக்கப்பட்டன. ஸ்வான் நட்சத்திரம் பிரகாசமானது தான் என்றாலும், அதை விடவும் லெம்மன் நட்சத்திரம் கூடுதல் பிரகாசமானது.

20 ஆயிரம் ஆண்டுகள் கழித்தே ஸ்வான் நட்சத்திரம் வானத்தில் தோன்றும். 3175ம் ஆண்டில் தான் மீண்டும் லெம்மன் நட்சத்திரத்தை பார்க்க முடியும். 2 நட்டசத்திரங்களும் பூமிக்கு மிக அருகில் தோன்றின. ஸ்வான் நேற்று முன் தினமும், லெம்மன் நேற்றும் வானத்தில் பிரகாசித்தது.

பெரும்பாலான வால் நட்சத்திரங்களை தொலை நோக்கிகள் வழியாகவே பார்க்க முடியும் ஆனால் தூசிபடிந்த பனி பந்து போல் இருக்கும் 2 வால் நட்சத்திரங்களையும் வெறும் கண்களால் பார்க்கும் அளவிற்கு இந்த வாரத்தில் 2 நட்சத்திரமும் நல்ல பிரகாசமாக தெரியும்.

சூரியன் மறைந்த பிறகு இரவு 7 மணிக்கு தோன்றி 7.45 மணிக்கு மறைந்து விடும். இந்த லெம்மன் நட்சத்திரத்தை 34 மணி நேர இடைவெளியில் பார்த்து ரசிக்கலாம். இந்த ஆண்டு ஜனவரி மாதம் இந்த லெம்மன் நட்சத்திரமும் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஸ்வான் நட்சத்திரமும் உக்ரேனிய வானவியல் ஆய்வாளரால் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரே வாரத்தில் தோன்றும் இந்த 2 வால் நட்சத்திரத்தை பார்க்க வானவியல் ஆர்வலர்கள் ஆர்வமாக உள்ளனர்.

## ரஷியாவிடம் இருந்து ரூ.10 ஆயிரம் கோடிக்கு ஏவுகணைகள் வாங்க இந்தியா திட்டம்



புதுடெல்லி, அக்.24

இந்தியா தனது வான் பாதுகாப்பில் எஸ்400 வான் பாதுகாப்பை பயன்படுத்தி வருகிறது. சுதர்சன சக்ரம் என்று பெயரிடப்பட்ட இந்த வான் பாதுகாப்பு அமைப்பு ரஷியாவிடம் இருந்து வாங்கப்பட்டது. சமீபத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கையின்போது எஸ் 400 வான் பாதுகாப்பு அமைப்பு பயன்படுத்தப்பட்டது. இந்தநிலையில், வான் பாதுகாப்பு திறன்களை மேலும் வலுபடுத்தும் வகையில், எஸ்400 வான் பாதுகாப்பு அமைப்புக்காக ரஷியாவிடமிருந்து சுமார் ரூ.10 ஆயிரம் கோடி மதிப்புள்ள ஏவுகணைகளை வாங்க இந்தியா திட்டமிட்டுள்ளது. இதற்கான பேச்சுவார்த்தையை இந்தியா நடத்தி வருகிறது.

# சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள்: அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு

சென்னை, அக்.23

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

வடகிழக்குப் பருவமழை 16.10.2025 அன்று தொடங்கி, தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் தொடர்ந்து பெய்து வருவதால், இன்று (22.10.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சென்னை ஓ.எம்.ஆர் சாலையான பெருங்குடி, ஒக்கியம் மடுவு, சோழிங்கநல்லூர், பள்ளிக்கரணை உள்ளிட்ட சாலைகள், மழைநீர் வடிகால்பணிகளைநேரில்சென்று ஆய்வு மேற்கொண்டார்.

தமிழகம் முழுவதும் ஒருங்கிணைந்த பணிகளை மேற்கொள்ள நெடுஞ்சாலைத்துறை சார்பில், பெருங்குடி பகுதியில் முதல் கட்டமாக 10 கோட்ட பொறியாளர்களுக்கு வாக்கி டாக்கிகளை அமைச்சர் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்து;

நெடுஞ்சாலைத்துறை மூலமாக, சென்னை பெருநகர மாநகராட்சி, தாம்பரம் மாநகராட்சி மற்றும் ஆவடி மாநகராட்சி ஆகிய மாநகராட்சி பகுதிகளை உள்ளடக்கிய சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 613 கி.மீ. நீளச்சாலைகள் பராமரிக்கப்படுகிறது என்றும், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 423 கி.மீ. நீளமுடைய மழைநீர் வடிகால், 18,000 சில்ட் கேட்ச் பிட், 752 சிறுபாலங்கள், 39 சிறிய



பாலங்கள், 20 பெரிய பாலங்கள் ஆகியவையும் நெடுஞ்சாலைத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்தார்.

பரங்கிமலை சுரங்கப்பாதை, கத்திப்பாரா சுரங்கப்பாதை, மீனம்பாக்கம் சுரங்கப்பாதை, வியாசர்பாடி சுரங்கப்பாதை, தில்லைகங்காநகர்சுரங்கப்பாதை, தர்கா சுரங்கப்பாதை, கத்திவாக்கம் சுரங்கப்பாதை ஆகிய 7 வாகன சுரங்கப்பாதைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 7 வாகன சுரங்கப்பாதைகளிலும் மழைநீரை வெளியேற்ற தயார் நிலையில், அதிக திறன் கொண்ட நீர் மூழ்கி இயந்திரங்களும், மின் மற்றும் டீசல் பம்புசெட்களும், ஜெனரேட்டர்களும் தயார் நிலையில் உள்ளன என்றும், 34 வெள்ள ரோந்து குழுக்கள் 24/7 நேரம் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். 500 சிறப்பு சாலைப் பணியாளர்கள் வெள்ளப் பணியினை மேற்கொள்வார்கள் என்றும், கோட்டம், வட்டம் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் அலுவலகத்தில் வெள்ள பாதிப்பினை எதிர்கொள்ள 24 மணிநேரமும் வெள்ளக் கட்டுப்பாட்டு அறை செயல்படுகிறது என்றும் தெரிவித்தார்.

10 வட்டங்களுக்கும் தலைமைப் பொறியாளர்கள் நிலையில் கண்காணிப்புப் அதிகாரிகள் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், 15 இடங்கள் அதிகம் பாதிப்படையும் இடங்களாக கண்டறியப்பட்டுள்ளது. இதில், 21 ராட்சஷ மோட்டடார்கள் தயார் நிலையில் உள்ளன என்றும், OMR சாலையில் ஒக்கியம் மடுவு பகுதியில் மெட்ரோ ரயில் பணிகள் மேற்கொள்ளப்பட்ட வருவதால் மழைநீர் தேங்காமல் தடுக்கவும், 17 சென்டிமீட்டர் மழை பெய்தாலும், ஒரு மணி நேரத்தில் மழைநீர் வடியும் அளவிற்கு ராட்சஷ மோட்டார்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், மேடவாக்கம் சோழிங்கநல்லூர் சாலையில் பள்ளிக்கரனை சதுப்புநிலம் சோழிங்கநல்லூர் பகுதியில் இருந்து, நேரடியாக பக்கிஹாம் கால்வாயினை சென்றடையும் வகையில் பெரிய மழைநீர் வடிகால்வாய் கட்டப்பட்டு வருகிறது. இப்பணி நிறைவு பெற்றவுடன் மழைநீர் வடிய ஏதுவாக இருக்கும் என்றும், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்த களஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் டாக்டர் ரா.செல்வராஜ், திட்ட இயக்குநர்

தெ.பாஸ்கரபாண்டியன், சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் ரா.சந்திரசேகர், தலைமை பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கு.கோ.சத்தியபிரகாஷ், தலைமைப் பொறியாளர் எஸ்.பழனிவேல், கண்காணிப்புப் பொறியாளர் வி.சரவணசெல்வம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்பு என்பது ஒவ்வொருவரின் பொறுப்பு" - ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் நிறுவனர் மற்றும் ரிச் யுனிவர்சிட்டி வேந்தர் Dr. Rtn.Ln.JC. துரை ராயப்பன்

வடகிழக்கு பருவமழை, புயல், பேரிடர் காலங்களில் மக்கள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு செய்தி

வடகிழக்குபருவமழைதொடங்கியுள்ள இக்காலங்களில், குடிசை வீடுகளில் வசிப்பவர்களிலிருந்து மாடி வீடுகள் மற்றும் அடுக்கு மாடி குடியிருப்புகளில் வாழ்பவர்கள்வரை அனைவரும் தங்களை பாதுகாப்பதற்கும், பேரிடர்களை எதிர்கொள்வதற்கும் முன்கூட்டியே தயாராக இருக்க வேண்டும் என ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் நிறுவனர் மற்றும் ரிச் யுனிவர்சிட்டி வேந்தர் Dr. துரை ராயப்பன் வலியுறுத்துகிறார்.

பேரிடர்களை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து Dr. துரைராயப்பன் விளக்குகிறார்:

"புயல், கனமழை, வெள்ளம் போன்ற பேரிடர்கள் எப்போது வரும் என்று நாம் கணிக்க முடியாது. ஆனால், அவற்றை எதிர்கொள்வதற்கான தயாரிப்புகள் நம்மிடம் இருக்க வேண்டும். பாதுகாப்பான சூழலை உருவாக்குவது, முக்கிய ஆவணங்களை பாதுகாப்பது, உணவுப் பொருட்கள், மருந்துகள், மற்றும் தொடர்பு வழிகளை முன்கூட்டியே திட்டமிடுவது அவசியம்."

குடிசை மற்றும் மாடி வீடுகளில் வசிப்போருக்கான பரிந்துரைகள்

வீடு சுற்றுப்புறம் சுத்தமாக இருக்க வேண்டும். தண்ணீர் தேங்கும் இடங்களை அகற்ற வேண்டும் மாடி வீடுகளில் வசிப்போர், மின்சார இணைப்புகள், நீர் வடிகால் அமைப்புகள் சரியாக செயல்படுகிறதா என பரிசோதிக்க வேண்டும் அடுக்கு மாடி குடியிருப்பு களில், அவசர வெளியேறும் வழிகள், பாதுகாப்பு அலாரங்கள், மற்றும் பொதுப் பயன்பாட்டு பகுதிகள் பராமரிக்கப்படுகிறதா என உறுதி செய்ய வேண்டும் முக்கிய ஆவணங்களை பாதுகாப்பது எப்படி அடையாள அட்டைகள், நில உரிமை ஆவணங்கள், மருத்துவ பதிவுகள் போன்றவை நீர்ப்புகாத பையில் வைத்திருங்கள் ஸ்கேன் செய்து cloud சேமிப்பகங்களில் (Google Drive, OneDrive) பாதுகாப்பாக வைத்திருங்கள்

உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகள் தயார் செய்து வைத்தல்

உலர்ந்த உணவுகள் (அரிசி, புளி, பருப்பு, பிஸ்கட், உப்பு) மற்றும் குடிநீர் பாட்டில்கள் தயார் வைத்திருங்கள்

தேவையான மருந்துகள், குழந்தைகளுக்கான பால் பொருட்கள், டபயர், முதியோருக்கான தேவைகள் முன்னதாக சேகரிக்க வேண்டும்

அவசர தொடர்பு வழிகள் – செல்போன் மூலம் தொடர்பு கொள்ளுதல்

உங்கள் செல்போனில் முக்கிய எண்கள் சேமித்து வைத்திருங்கள்

மாவட்ட நிர்வாகம் காவல் நிலையம் தீயணைப்பு நிலையம் மருத்துவமனை அருகிலுள்ள மீட்பு மையம் மின்சாரம் துண்டிக்கப்படும் சூழ்நிலையில், முழுவதும் சார்ஜ் செய்யப்பட்ட பவர் பேங்க் வைத்திருங்கள் பேரிடர் காலங்களில் செய்ய வேண்டியவை வானிலை எச்சரிக்கைகளை தொடர்ந்து கவனிக்கவும் அரசுஅறிவிப்புகளைபின்பற்றவும் பாதுகாப்பான இடத்திற்கு இடம் பெயர்வதற்கான திட்டம் தயாராக வைத்திருங்கள் முதற்கட்ட உதவி பெட்டி, டார்ச், பேட்டரி, ரேடியோ போன்றவை தயாராக வைத்திருங்கள்

சமூக நலனுக்கான ஒத்துழைப்பு மிக மிக முக்கியம் என Dr. துரை ராயப்பன் கூறுகிறார். மேலும் அவர் கூறுகையில்:

"பேரிடர் காலங்களில் நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ளும் திறன், சமூகத்தின் ஒட்டுமொத்த நலனுக்கே அடித்தளமாக அமைகிறது. Roy Trust International மற்றும் RICH University சார்பில், மக்கள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சிகள் தொடரும்."

பொது மக்கள் நலன் கருதி அனைத்து சமூக சேவை சங்கங்களும் அரசுடன் இணைந்து செயல்பட வேண்டும் என முனைவர் துரை ராயப்பன் கூறினார்.

## சென்னையில் மழையால் பாதிக்கப்பட்ட 1.47 லட்சம் பேருக்கு காலை உணவு

சென்னை, அக்.23

வடகிழக்குப் பருவமழை தொடங்கியதன் காரணமாக தமிழ்நாடு முழுவதிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக மழையால் பாதிப்பு ஏற்பட்டால் மக்கள் தங்குவதற்காக முகாம்களை தயார்நிலையில் வைத்திருக்கவும், முகாம்களில் மக்களுக்கு வழங்கிட உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டும் என்றும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தி உள்ளார்.

அதன்படி, சென்னை மாநகரில் மழைநீர் தேங்கும் பகுதிகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளிலும் 215 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் தங்கவைக்கப்படும் மக்களுக்கு உணவு வழங்குவதற்காக 106 உணவு தயாரிப்புக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 68 உணவு தயாரிப்புக் கூடங்களில் உணவுகள் தயாரிக்கப்படுகின்றன.

சென்னையில் பெய்துவரும் தொடர்மழை



காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பெருநகர மாநகராட்சி வாயிலாக இந்த உணவு மையங்களிலிருந்து காலை 1 லட்சத்து 46 ஆயிரத்து 950 பேருக்கு காலை உணவு வழங்கப்பட்டுள்ளது. 24 மணிநேரமும் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் பொதுமக்களிடமிருந்து 1913 என்ற உதவி எண்ணிற்கு வரும் புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 22 ஆயிரம் பேரும் சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் 2149 களப் பணியாளர்களும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.




# பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் குருபூஜை விழாவில் கலந்து கொள்பவர்களுக்கு கட்டுப்பாடுகள்





ராமநாதபுரம், அக்.23

ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் வருகிற 27ந்தேதி முதல் 30ந்தேதி வரை முத்துராமலிங்கத்தேவர் குருபூஜை விழா நடைபெற உள்ளது. இந்த விழாவில் கலந்து கொள்ளக்கூடிய அரசியல் கட்சியினர், சமுதாய அமைப்பினர், பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்து ராமநாதபுரம் கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

ராமநாதபுரம் மாவட்டத்தில் தடை உத்தரவு உள்ளதால் குருபூஜை விழாவிற்கு வாடகை வாகனங்களில் வருவதற்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. இருசக்கர வாகனங்களிலும், சரக்கு வாகனங்களிலும், நடைபயணமாகவும் பசும்பொன் வர அனுமதி கிடையாது. தலைவர்கள் செல்லும் வாகனத்துடன் 3 வாகனங்கள் மட்டும் செல்ல அனுமதிக்கப்படும்.

சொந்த வாகனங்களில் மட்டுமே வர வேண்டும். இவ்வாறு வருபவர்கள் வாகனத்தின் பதிவு ஆவணம், ஓட்டுனர் உரிமம், வண்டியில் வருபவர்களின் விவரம் ஆகியவற்றை சமர்ப்பித்து அந்தந்த பகுதியில் உள்ள துணை போலீஸ் சூப்பிரண்டு அலுவலகம் மற்றும் போலீஸ் நிலையங்களில் அனுமதி பெற்று அந்த அனுமதி சீட்டை வாகனத்தின் முன்புற கண்ணாடியில் ஒட்டி இருக்க வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி தலைவர்களுக்கு மட்டும் அஞ்சலி செலுத்த நேரம் ஒதுக்கீடு செய்யப்படும். இதற்காக அரசியல் கட்சியினர் நாளைக்குள் ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கவேண்டும். வாகனத்தில் ஒலிபெருக்கி, சாதி மத உணர்வுகளை தூண்டும் வாசகங்களுடன் பேனர்கள் இருக்கக் கூடாது. வாகனத்தில் வரும்போது கோஷங்களை எழுப்பக் கூடாது.

சொந்த வாகனத்தை வாடகைக்கு விடக்கூடாது. வாகன தணிக்கையின் போது அதன் உரிமையாளர் இருக்க வேண்டும். வாகனங்களில் மதுபானங்கள், ஆயுதங்கள் எடுத்து வரக்கூடாது. வாகன கூரையின் மீது பயணம் செய்யக் கூடாது. போக்குவரத்திற்கு இடையூறாக வாகனங்களை வழியில் நிறுத்தக்கூடாது. அனுமதி பெறாத வாகனங்கள் தடுத்து நிறுத்தப்படும். வருகிற 29, 30ந் தேதிகளில் கமுதிக்கு கூடுதல் பஸ் வசதி செய்யப்படும்.

கிராமத்தினர் அரசு பஸ்களில் முன்பதிவு செய்து அஞ்சலி செலுத்த வரலாம். அலங்கார ஊர்தி அணிவகுப்பு, சாதி தலைவர் வேடமிட்டு வருதல், மாட்டு வண்டியில் வருதல், ஜோதி ஓட்டம் போன்றவற்றிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் 29ந்தேதி மட்டும் கமுதி துணை போலீஸ் சூப்பிரண்டு அலுவலகம் அனுமதி பெற்று கமுதி மற்றும் அபிராமத்தில் இருந்து பசும்பொன் வரை ஜோதி, முளைப்பாரி, பால்குடம் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும்.

சென்னை ஐகோர்ட்டு உத்தரவின்படி பிளக்ஸ் போர்டுகள் வைக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது. நெடுஞ்சாலைகளிலும் பேனர்கள், கொடி, தோரண வளைவு அமைக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது. அக்டோபர் 30ந்தேதி மட்டும் கிராமங்களில் படத்திற்கு அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்படும். மாவட்டத்தின் எந்த இடத்திலும் ஒலிபெருக்கி வைக்க அனுமதி இல்லை. இந்த கட்டுப்பாடுகள், நெறிமுறைகளை மீறினால் சம்பந்தப்பட்ட ஒலிபெருக்கி, இசைக்கருவிகள் பறிமுதல் செய்யப்படுவதுடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

நிகழ்ச்சிக்கு வருபவர்களுக்கு தடையை மீறி வாடகைக்கு வாகனங்களை விடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் வாகனத்தின் உரிமம் ரத்து செய்யப்படும். கிராமங்களில் தேவர் ஜெயந்தி விழா கொண்டாடுபவர்கள் சம்பந்தப்பட்ட போலீஸ் நிலையத்தில் அனுமதி பெற்று விதிமுறைகளை பின்பற்றி நடத்த வேண்டும். வரும் வழியில் பட்டாசுகள் வெடிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது. மற்ற வாகனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது.

அன்னதானக்கூடம் அமைப்பவர்கள் காவல் துறை மற்றும் வருவாய்த்துறையினரிடம் அனுமதி பெற்று, அன்னதானக்கூடம் அமையவுள்ள இடம் தணிக்கை செய்யப்பட்டு இருக்க வேண்டும். அன்னதானக்கூடத்திற்கு அமைக்கப்படும் பந்தல்களுக்கு உறுதிதன்மை சான்றிதழ், மின்சாரத்துறையினரிடம் மின்னழுத்தநிலைத்தன்மை சான்றிதழ் ஆகியவற்றை சம்பந்தப்பட்டதுறையினரிடம் பெறவேண்டும்.

மேலும் அன்னதானப்பந்தல்கள் அமையவுள்ள இடத்திற்கு முன்பாக வாகனநிறுத்தும் இடங்களை ஏற்பாடு செய்ய வேண்டும். அன்னதான நிகழ்ச்சியில் வழங்கப்படும் உணவுகளை, உணவு கட்டுப்பாட்டு துறையினர் மூலம் பரிசோதனை செய்த பின்னரே பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுவை கீழே கொட்டிய மகள்... விரக்தியில் தொழிலாளி விஷம் குடித்து தற்கொலை

கன்னியாகுமரி அக்.23

கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அருகே உள்ள ஆலங்கோடு கண்ணோடு பகுதியை சேர்ந்தவர் ராஜேந்திரன் (49 வயது), கட்டிட தொழிலாளி. இவருக்கு அகிலா (47 வயது) என்ற மனைவியும், ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். தற்போது ராஜேந்திரன் குடும்பத்துடன் அம்மாண்டி விளை அருகே மூங்கில்விளையில் வசித்து வருகிறார். ராஜேந்திரனுக்கு மது பழக்கம் இருந்தாக கூறப்படுகிறது. இதனால் அவர், தினமும் மது குடித்து விட்டு வந்து மனைவியிடம் தகராறு செய்வது வழக்கம்.

இந்த நிலையில் சம்பவத்தன்று திங்கள்சந்தைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு திரும்பினார். அப்போது வாங்கி வந்த ஒரு மதுபாட்டிலை வீட்டில் உள்ள பீரோவில் மறைத்து வைத்துள்ளார். இதைபார்த்த அவரது மகள் பாட்டிலை எடுத்து வெளியே வந்து மதுவை கீழே ஊற்றியுள்ளார். இதனால் மனமுடைந்த ராஜேந்திரன், வீட்டில் இருந்த செடிகளுக்கு பயன்படுத்தும் பூச்சிக்கொல்லி மருந்தை குடித்துள்ளார்.

இதைக்கண்டு அதிர்ச்சி அடைந்த குடும்பத்தினர் உடனடியாக அவரை மீட்டு சிகிச்சைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் மேல்சிகிச்சைக்காக முட்டத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி ராஜேந்திரன் பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து அவரது மனைவி அகிலா கொடுத்த புகாரின் பேரில் மணவாளக்குறிச்சி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆபாச வீடியோ எடுத்து பணம் கேட்டு மிரட்டல்: இளம்பெண் எடுத்த விபரீத முடிவு

தென்காசி அக்.23

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் அருகே உள்ள குறும்பலாப்பேரி அம்மன் நகரைச் சேர்ந்தவர் கண்ணன் மகன் சக்திவேல் (32 வயது). இவர் ஆலங்குளம் அருகே உள்ள கிராமத்தில் உள்ள உறவினரின் வீட்டுக்கு அடிக்கடி சென்று வந்தார்.

அப்போது அந்த ஊரைச் சேர்ந்த ளம்பெண் திருமணமாகி 7 ஆண்டுகளாக குழந்தை இல்லாததால் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, கணவரை பிரிந்து தாத்தா வீட்டில் வசித்து வந்தார். அந்த இளம்பெண்ணுடன் சக்திவேலுக்கு இன்ஸ்டாகிராம் மூலம் பழக்கம் ஏற்பட்டது. நாளடைவில் அவர்கள் தனிமையில் சந்தித்து நெருங்கி பழகினர்.

அந்த இளம்பெண்ணுடன் சக்திவேல் தனிமையில் நெருக்கமாக இருந்ததை செல்போனில் ஆபாச வீடியோவாக பதிவு செய்து வைத்திருந்தார். பின்னர் சக்திவேல் அந்த வீடியோவை சமூக வலைதளத்தில் வெளியிடுவேன் என்று கூறி மிரட்டி அந்த பெண்ணிடம் ரூ.3 லட்சம் பறித்துள்ளார். பின்னர் மேலும் ரூ.1 லட்சம் தருமாறு அந்த பெண்ணை மிரட்டினார். ஆனால் அவர் சக்திவேலுக்கு கூடுதலாக பணம் கொடுக்க மறுத்து விட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த சக்திவேல் இளம்பெண்ணுடன் நெருக்கமாக இருந்த ஆபாசவீடியோவை அப்பகுதியைச் சேர்ந்த தனது உறவினர்கள் சிலரின் செல்போனுக்கு அனுப்பினார். அதைப் பார்த்த அவர்களும் இளம்பெண்ணை மிரட்டினர்.

துகுறித்து இளம்பெண் தனது தாயாரிடம் கூறினார். இதுதொடர்பாக ஆலங்குளம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. இந்த நிலையில் இளம்பெண் நேற்று காலையில் தனது தாத்தா வீட்டில் திடீரென்று தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதனைப் பார்த்த அதிர்ச்சி அடைந்த குடும்பத்தினர் கதறி அழுதனர். இது குறித்து தகவல் அறிந்ததும், ஆலங்குளம் போலீசார் விரைந்து சென்று, இறந்த இளம்பெண்ணின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தற்கொலை செய்துகொள்வதற்கு முன்பாக இளம்பெண் தனது சாவுக்கு காரணமானவர்கள் என்று சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டு கடிதத்தில் எழுதி வைத்திருந்தார். அந்த கடிதத்தைக் கைப்பற்றி போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

அதன்பேரில் இளம்பெண்ணை தற்கொலைக்கு தூண்டியதாக சக்திவேல், மருதம்புத்தூரை சேர்ந்த முத்துராஜா (36 வயது), முருகேசன் (42 வயது) ஆகிய 3 பேரை போலீசார் கைது செய்தனர். மேலும் தலைமறைவான சிலரை வலைவீசி தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ரூ.4 கோடிக்கு பதிலாக ரூ.400 மதிப்புள்ள கைக்கடிகாரம்; சென்னையில் ஜவுளிக்கடை அதிபர் மகளிடம் மோசடி

சென்னை, அக்.23

சென்னை அபிராமபுரம் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் பிரபல ஜவுளிக்கடை அதிபரின் மகள் வசிக்கிறார். அவர் ரூ.4 கோடி மதிப்புள்ள கைக்கெடிகாரத்தை வெளிநாட்டில் இருந்து வாங்குவதற்காக பதிவு செய்திருந்தார். ஆன்லைன் மூலம் இந்த விலை உயர்ந்த கைக்கெடிகாரத்தை வாங்குவதற்கு ஏற்பாடு செய்தார். இதற்கு முன்பணமாக ரூ.2.30 கோடி அனுப்பி இருந்தார். நேற்று முன்தினம் ஆன்லைன் மூலமாக குறிப்பிட்ட கைக்கெடிகாரம் ஜவுளிக்கடை அதிபர் மகளிடம் கொடுக்கப்பட்டது.

பார்சலை பிரித்து பார்த்த அவருக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. பார்சலில் ரூ.4 கோடி மதிப்புள்ள கைக்கெடிகாரத்துக்கு பதிலாக ரூ.400 மதிப்புள்ள சாதாரண கைக்கெடிகாரம் இருந்துள்ளது. இதையடுத்து, கைக்கெடிகாரத்தை வாங்கி தருவதாக அடையாறு போட் கிளப் சாலையில் வசிக்கும் தொழிலதிபர் ஒருவர் ஏஜெண்டாக செயல்பட்டார்.

அவர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், முன்பணமாக கொடுத்த ரூ.2.30 கோடியை வாங்கித் தரவேண்டும் என்றும் கோரிக்கை வைத்து சென்னை அபிராமபுரம் போலீஸ் நிலையத்தில் பரபரப்பு புகார் மனு நேற்று முன்தினம் இரவு கொடுக்கப்பட்டது.

இந்த புகார் மனு து கோட்டூர்புரம் உதவி கமிஷனர் நேரடியாக விசாரித்து வருகிறார். புகார் மனு விசாரணைக்காக மத்திய குற்றப்பிரிவு போலீசாருக்கு அனுப்பி வைக்கப்படும் என்று போலீஸ் வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது

# மழை வெள்ளத்தை சமாளிக்க 12 துணை கமிஷனர்கள் தலைமையில் பேரிடர் மீட்பு படை தயார்

சென்னை, அக்.23

சென்னையில் பருவமழையின் தீவிரம் அதிகமாகி உள்ளது. இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை கூட கொண்டாட விடாமல் மழை பெய்தது. மழை வெள்ளத்தை சமாளிப்பதற்காக முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை செய்யும்படி முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அனைத்து துறையினருக்கும் உத்தரவிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில், சென்னை நகர போலீசாரையும் உஷார்படுத்தி போலீஸ் கமிஷனர் அருண் பல்வேறு முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை செய்துள்ளார். சென்னையில் 12 துணை கமிஷனர்கள் தலைமையில் மழை வெள்ளத்தை சமாளிக்க 12 பேரிடம் மீட்பு படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மத்திய, மாநில பேரிடர் மீட்பு படை வீரர்கள் மற்றும் நீச்சல் வீரர்கள் இந்த பேரிடர் மீட்பு படைகளில் இடம்பெற்றுள்ளனர்.

இதுதவிர சென்னை நகர் முழுவதும் 39 இடங்களில் சிறப்பு போலீஸ் கட்டுப்பாட்டு அறைகளும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தென்சென்னையில் மட்டும் 23 சிறப்பு மினி போலீஸ் கட்டுப்பாட்டு அறைகள் திறக்கப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட மக்கள் தொலைபேசி எண் 100ல் பேசி உதவி கேட்டால் உடனடியாக மீட்பு படையினர் சென்று உதவிக்கரம் நீட்டுவார்கள் என்றும் தென்சென்னை கூடுதல் கமிஷனர் டாக்டர் கண்ணன் தெரிவித்தார்.

மொத்தத்தில் மழை வெள்ளத்தை சமாளிக்க சென்னை போலீசார் தயார்நிலையில் இருப்பதாக போலீஸ் கமிஷனர் அலுவலக வட்டார உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ரூ.790 கோடிக்கு மது விற்பனை: சாராயம் விற்பதில் சாதனை படைப்பது தான் திராவிட மாடலா? அன்புமணி ராமதாஸ்



சென்னை அக்.23

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டில் தீபாவளி திருநாளையொட்டி, 3 நாள்களில் மொத்தம் ரூ.789.85 கோடிக்கு டாஸ்மாக் கடைகளில் மது வணிகம் நடைபெற்றிருப்பதாக வெளியாகியிருக்கும் செய்திகள் வருத்தமும், வேதனையும் அளிக்கின்றன. கொண்டாட்டங்கள் என்றாலே மது அருந்துவது தான் என்ற நிலைக்கு தமிழ்நாட்டு மக்களை திராவிட மாடல் அரசு சீரழித்து வைத்திருக்கிறது என்பதற்கு மிக மோசமான எடுத்துக்காட்டுதான் இது வாகும்.

தீபாவளித் திருநாளுக்கு இரு நாள்கள் முன்பாக கடந்த 18ம் தேதி ரூ.230.06 கோடி, அதற்கு அடுத்த நாள் 19ம் தேதி ரூ.293.73 கோடி, தீபாவளி நாளில் ரூ.266.06 கோடி என மொத்தம் 3 நாள்களில் ரூ.789.85 கோடிக்கு மது விற்பனையாகியிருக்கிறது. இதில் சென்னை மண்டலம் ரூ.158.25 கோடி, திருச்சி மண்டலம் ரூ. 157.31 கோடி, சேலம் மண்டலம் ரூ.153.34 கோடி, மதுரை மண்டலம் ரூ.170.64 கோடி, கோவை மண்டலம் ரூ.150.31 கோடி என்ற அளவில் பங்களித்திருக்கின்றன.

தமிழ்நாட்டில் சம்பந்தப்பட்ட 3 நாள்களில் பெய்த மழையை விட, மது மழை மிக அதிகம் என்பதையே இந்த புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. தமிழ்நாட்டில் பெண்களின் வாழ்வை முன்னேற்றுவதற்கான திட்டம் என்று போற்றப்படும் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டு குடும்பங்களுக்கு வழங்கப்படும் தொகை ரூ.13,000 கோடி, அதாவது ஒரு நாளைக்கு ரூ. 35.61 கோடி. 3 நாள்களுக்கு கணக்கிட்டால் ரூ.106.86 கோடி.

ஏழைக் குடும்பங்களை உருவாக்குவதற்காக தமிழ்நாடு அரசு ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கும் தொகையை விட, 7.39 மடங்கு அதிக தொகையை மது வணிகம் என்ற பெயரில் ஏழைக் குடும்பங்களிடமிருந்து பறித்துக் கொள்கிறது. இவ்வாறு மதுவைக் கொடுத்து மக்களிடமிருந்து பணத்தைப் பறித்தால் ஏழைக் குடும்பங்கள் எங்கிருந்து முன்னேறும்?

ஒன்று மட்டும் உறுதி.... தமிழ்நாட்டின் வருவாயை ஆக்கப்பூர்வமான வழிகளில் முன்னேற்றுவதற்கான எந்த திட்டமும் திமுக அரசிடம் இல்லை. அதனால் தான் மதுவைக் கொடுத்து மக்களை அழிக்கும் ஆபத்தான திட்டத்தைக் கட்டிக் கொண்டு அழுகிறது. மதுவை ஒழித்து மக்களைக் காக்கும் அறத்தை திராவிட மாடல் அரசிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. இன்னும் 4 மாதங்களில் திமுக ஆட்சிக்கு முடிவுரை எழுதப்படும் நிலையில், அடுத்து பாமக ஆதரவுடன் அமையவுள்ள ஆட்சியில் மது விலக்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று உறுதியளிக்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தீபாவளி பண்டிகை: ஸ்ரீவில்லிபுத்தூரில் ரூ.10 கோடிக்கு பால்கோவா விற்பனை

விருதுநகர், அக்.23

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா தனிச்சுவை கொண்டது என்பதால் மிகவும் பிரசித்தி பெற்றது. இப்பகுதியில் 500க்கும் மேற்பட்ட பால்கோவா உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதனால் ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும்சுற்றுப்பகுதிகளுக்கு வருபவர்கள் இங்கு விற்கப்படும் பால்கோவாவை வாங்கிச்சென்று தங்களது உறவினர்கள், நண்பர்களுக்கு வழங்குவது வழக்கம்.

இத்தனை பிரபலமான ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவாவிற்கு புவிசார் குறியீடு அங்கீகாரம் வழங்கப்பட்டு உள்ளது. இந்த அங்கீகாரம் கிடைத்ததில் இருந்து இப்பகுதி உற்பத்தி நிலையங்களில் பால்கோவாவின் விற்பனை அதிகரித்து உள்ளது.

இந்த ஆண்டு தீபாவளி பண்டிகையையொட்டி உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து பால்கோவா ஆர்டர்கள் அதிகளவில் குவிந்தன. இதனால் கடந்த ஒரு வாரமாக இப்பகுதியில் பால்கோவா உற்பத்தி தீவிரமாக இருந்தது. மேலும் வாடிக்கையாளர்களுக்காக கருப்பட்டி பால்கோவா, நாட்டுச் சர்க்கரை பால்கோவா, பால் கேக், பால் அல்வா என பல விதமான புதிய வகைகளில் பால்கோவா தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வந்தன.

ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவாவிற்கு அதிக மவுசு இருப்பதால் வெளியூர் மற்றும் வெளிநாடுகளுக்கும் அனுப்பப்பட்டது. இதுகுறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா ஏற்றுமதியாளர் திருப்பதிராஜ் கூறுகையில், இந்த ஆண்டு தீபாவளியையொட்டி பால்கோவா விற்பனை அதிகரித்து உள்ளது. ஆர்டர்கள் அதிகளவில் வந்ததால் பால்கோவா உற்பத்தியில் மும்முரமாக ஈடுபட்டு இருந்தோம். தீபாவளியையொட்டி கடந்த 3 நாட்களில் மட்டும் ரூ.10 கோடிக்கு பால்கோவா விற்பனையானது என்றார்.

# அனைத்து மாவட்டங்களிலும் அலெர்ட்டாக இருக்கிறோம் உதயநிதி ஸ்டாலின்




சென்னை, அக்.23

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. கடந்த 16ந் தேதி பருவமழை தொடங்கியதில் இருந்து பரவலாக மழை பெய்து வருகிறது. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் கன மழை பெய்து வருகிறது.

இதற்கிடையில், தென்மேற்கு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி, தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக நீடிக்கிறது. தொடர்ந்து மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து இன்று (புதன்கிழமை) பிற்பகலில் தென்மேற்கு மற்றும் அதனையொட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் வட தமிழக, புதுச்சேரி மற்றும் தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளுக்கு அப்பால் தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும்.

அதற்கடுத்து மேலும் மேற்குவடமேற்கு திசை நோக்கி நகர்ந்து, நாளை (வியாழக்கிழமை) வட தமிழகம், புதுச்சேரி, தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளுக்கு வந்து தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைய வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் அடுத்த சில நாட்களுக்கு மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், சென்னையில் மழை பாதிப்புகள் குறித்து துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் சென்று ஆய்வு செய்தார். அப்போது சென்னையில் மேற்கொண்டு வரும் முன்னேற்பாடு நடவடிக்கைகளிலும், மழைநீர் தேங்கும் பகுதிகளிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

அதன்பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் உதயநிதி ஸ்டாலின் கூறுகையில், "மழை பாதிப்பு குறித்து தொலைபேசியின் மூலம் வரும் புகார்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். அவசரகட்டுப்பாட்டு மையத்திற்கு தொலைபேசி மூலமாக வந்த புகாரை அடுத்து, நேரடியாக அந்த பகுதிக்கு வந்து ஆய்வு மேற்கொண்டு இருக்கின்றேன். முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்க உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் அமைச்சர்கள், அதிகாரிகள் என அனைவரும் தயார் நிலையில் உள்ளனர். அனைத்து மாவட்டங்களிலும் அலெர்ட்டாக இருக்கிறோம்" என்று கூறினார்.

# கடந்த கால சாதனைகளை முறியடித்த தீபாவளி மது விற்பனை.. முதலிடத்தில் இந்த மண்டலமா..?



சென்னை, அக்.23

தமிழகத்தில் எந்த பண்டிகை என்றாலும், அதில் மது விற்பனை என்பது மிக அமோகமாக நடக்கிறது. எந்த பண்டிகை என்றாலும் எங்களுக்கு மதுதான் முக்கியம் என்ற ரீதியில் மதுபிரியர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபடுகின்றனர். எனவே ஒவ்வொரு பண்டிகையின்போதும் மது விற்பனை உச்சத்தை தொடுகிறது. கடந்த 1ந்தேதி ஆயுத பூஜை தினத்தில் கூட மது விற்பனை இதுவரை இல்லாத அளவுக்கு ஒரே நாளில் ரூ.240 கோடியை தொட்டது.

இந்நிலையில் கடந்த கால அனைத்து சாதனைகளையும் முறியடித்து தமிழ்நாட்டில் இந்த ஆண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மது விற்பனை வரலாறு காணாத அளவில் உயர்ந்துள்ளது. இதன்படி மொத்த விற்பனை ரூ.790 கோடிக்கு நடந்துள்ளது. இதுவரை எந்த பண்டிகை காலத்திலும் இந்த அளவுக்கு மது விற்பனையாகவில்லை என்று கூறப்படுகிறது.

முதலிடத்தில்..

தமிழ்நாட்டில் 4,777 மதுக்கடைகள் உள்ளன. இந்த கடைகள் மூலம் தினந்தோறும் சராசரியாக ரூ.150 கோடி வரை விற்பனை இருக்கும். விடுமுறை தினம் மற்றும் வார இறுதி நாட்களான வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை அதிகபட்சமாக ரூ.170 முதல் ரூ.180 கோடி வரை விற்பனை இருக்கும். அதுவே, பண்டிகை காலங்களில் விற்பனை இன்னும் அதிகமாக இருக்கும்.

கடந்த ஆண்டு தீபாவளி பண்டிகை விற்பனை ரூ.490 கோடிக்கு இருந்தது. எனவே இந்தாண்டு விற்பனை ரூ.600 கோடி இருக்கும் என மதிப்பிடப்பட்டு இருந்தது. ஆனால் யாரும் எதிர்பார்க்காத வகையில் ரூ.790 கோடிக்கு மது விற்பனை நடந்து இருக்கிறது.

கடந்த 18ந்தேதி ரூ.230 கோடியே 6 லட்சத்துக்கும், 19ந்தேதி ரூ.293 கோடியே 73 லட்சத்துக்கும், தீபாவளியான 20ந்தேதி ரூ.266 கோடியே 6 லட்சத்துக்கும் என மொத்தமாக 3 நாட்களில் ரூ.789 கோடியே 85 லட்சத்துக்கு விற்பனை நடந்து இருக்கிறது.

இந்த 3 நாட்களில் மண்டல வாரியாக விற்பனையை பார்த்தால் மதுரை தான் முதலிடம் பிடித்து இருக்கிறது. மதுரை மண்டலத்தில் ரூ.170 கோடியே 64 லட்சமும், சென்னை மண்டலத்தில் ரூ.158 கோடியே 25 லட்சத்துக்கும், திருச்சி மண்டலத்தில் ரூ.157 கோடியே 31 லட்சத்துக்கும், சேலம் மண்டலத்தில் ரூ.153 கோடியே 34 லட்சத்துக்கும், கோவை மண்டலத்தில் ரூ.150 கோடியே 31 லட்சத்துக்கும் மது விற்பனை நடந்து இருக்கிறது.

# வக்கீல்களுக்கு விபத்து காப்பீடு திட்டம் அறிமுகம் பார் கவுன்சில் அறிவிப்பு

சென்னை, அக்.23

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில், வக்கீல்களுக்கு '999' என்ற புதிய விபத்து காப்பீட்டுத்திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

இந்த புதிய திட்டத்தை சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், ஆர். மகாதேவன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இதுகுறித்து பார் கவுன்சில் தலைவர் பி.எஸ்.அமல்ராஜ் கூறும்போது, "பார் கவுன்சிலும், நேஷனல் காப்பீட்டு நிறுவனமும் இணைந்து இந்த புதிய விபத்து காப்பீட்டு திட்டத்தை அறிமுகம் செய்து உள்ளோம். வக்கீல்கள் ஆண்டுக்கு ரூ.999 செலுத்தினால் மட்டும் போதும்.

விபத்து மருத்துவ செலவுக்கு ரூ.3 லட்சமும், விபத்தில் பலியானால் ரூ.25 லட்சம், விபத்தில் உடல் உறுப்பு இழந்தால் ரூ.25 லட்சம் என்று பல்வேறு இழப்பீடு தொகை நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

இந்த காப்பீட்டில் சேர பார் கவுன்சில் இணையதளம் மூலம் வக்கீல்கள் விண்ணப்பிக்கலாம்" என்று கூறினார்.

# கரூர் கூட்டநெரிசல் சம்பவம் சிபிஐ விசாரணைக்கு உதவ 2 ஐபிஎஸ் அதிகாரிகள் நியமனம்



கரூர், அக்.23

கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் கடந்த மாதம் (செப்டம்பர்) 27ந் தேதி பிரசாரம் செய்தபோது கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில் பெண்கள், குழந்தைகள் உள்பட 41 பேர் உயிரிழந்த சம்பவம் நாட்டையே உலுக்கியது. இந்த சம்பவம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, கூட்ட நெரிசல்சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்த கடந்த 13ந்தேதி உத்தரவிட்டது. இதனைத்தொடர்ந்து, சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின்படி ஐ.பி.எஸ். அதிகாரி பிரவீன் குமார் தலைமையிலான சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணையை தொடங்கினர்.

இந்நிலையில் கரூர் சம்பவம் குறித்த சிபிஐ விசாரணையை கண்காணிக்கும் சிறப்பு குழுவில் இடம்பெற்றுள்ள ஐபிஎஸ் அதிகாரிகளின் விவரங்கள் வெளியாகி உள்ளன. இதன்படி சிபிஐ விசாரணைக்கு உதவ சுப்ரீம்கோர்ட்டு முன்னாள் நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையில், தமிழ்நாட்டு பிரிவை சேர்ந்த மூத்த அதிகாரிகளான சுமித் சரண் (சிஆர்பிஎப் டெல்லி), சோனல் வி.மிஸ்ரா (எல்லைப் பாதுகாப்புப் படை) ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# சிவகாசி அருகே சோகம்.. வீட்டின் சுவர் விழுந்து நர்சிங் மாணவி உயிரிழப்பு



விருதுநகர் அக்.23

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே உள்ள பழைய வெள்ளையாபுரத்தை சேர்ந்தவர் வீரமணி. இவருடைய மகள் பவானி (வயது 17). இவர் சிவகாசியில் உள்ள ஒரு நர்சிங் கல்லூரியில் படித்து வந்தார்.

இந்தநிலையில் கடந்த 18ந் தேதி வீரமணி தனது மனைவி ராதாவுடன் சேர்ந்து தனது மண் வீட்டை சுத்தம் செய்து கொண்டிருந்தார். அந்த வீட்டின் வெளியே மாணவி பவானி அமர்ந்திருந்தார்.

அப்போது அந்த பகுதியில் பெய்த தொடர் மழையால் திடீரென வீட்டின் ஒரு பக்க சுவர் இடிந்து பவானி மீது விழுந்ததாக கூறப்படுகிறது. இதில் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கிய அவர் படுகாயம் அடைந்தார். அவரை பெற்றோரும், அக்கம்பக்கத்தினரும் மீட்டு சிகிச்சைக்காக மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தனர்.

அங்கு தீவிர சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனளிக்காமல் பவானி பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து திருத்தங்கல் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மழையால் மண் சுவர் இடிந்துவிழுந்து மாணவி இறந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது. உயிரிழந்த மாணவியின் குடும்பத்துக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும் அந்த பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# தீபாவளி பட்டாசு புகையால் விமான சேவை பாதிப்பு



சென்னை, அக்.23

சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் நேற்று முன்தினம் காலை மழை விட்டு விட்டு பெய்தது. இதனால் தீபாவளி அன்று காலை அதிக அளவில் பட்டாசுகள் வெடிக்க முடியவில்லை. மாலை நேரத்தில் மழை சற்று ஓய்ந்ததும் ஒட்டுமொத்தமாக பட்டாசுகள் வெடிக்கப்பட்டன. விமான நிலையத்தை சுற்றி உள்ள குடியிருப்புகளில் உள்ளவர்கள் அதிக அளவிலான பட்டாசுகளை தொடர்ச்சியாக வெடித்தனர்.

பட்டாசு புகையால் விமான நிலைய ஓடுபாதை பகுதியில் புகை மண்டலம் சூழ்ந்தது. இதனால் இரவு 7 மணிக்கு மேல், விமான நிலையத்தில் தரையிறங்க வந்த விமானங்களுக்கும், சென்னையில் இருந்து புறப்பட வேண்டிய விமானங்களுக்கும் உடனடியாக அனுமதி கொடுக்கப்படாமல், ஓடுபாதை தெளிவான பின்னரே அனுமதி அளிக்கப்பட்டது.

இதன் காரணமாக ஐதராபாத், லக்னோ, மதுரை, டெல்லி, பெங்களூர்,

டாக்கா பகுதிகளில் இருந்த வந்த 7 விமானங்கள்,நீண்டநேரம்வானில் வட்டமடித்து பின்பு தரையிறங்கியது. சென்னையில் இருந்து டெல்லி, கொச்சி, பெங்களூர், கோவை, ஐதராபாத், தோகா, கோலாலம்பூர், ஐதராபாத் பகுதிகளுக்கு செல்ல வேண்டிய 8 விமானங்கள், தாமதமாக புறப்பட்டு சென்றன. பட்டாசு புகை மண்டலத்தால் சென்னை விமான நிலையத்தில் 7 வருகை விமானங்கள், 8 புறப்பாடு விமானங்கள் என மொத்தம் 15 விமான சேவைகள் பாதிக்கப்பட்டன.

நேற்றும் சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் கனமழை பெய்தது. இதனால் மும்பை, பெங்களூரு, கோயம்புத்தூர், விஜயவாடா, மதுரை, ஐதராபாத், கொழும்பு, தூத்துக்குடி, அந்தமான் பகுதிகளில் இந்த வந்த 15க்கும் மேற்பட்ட விமானங்கள், கட்டுப்பாட்டு அறை அதிகாரிகளிடம் இருந்து அனுமதி கிடைக்காததால் சுமார் 30 நிமிடங்கள் வரை வானில் வட்டமடித்து விட்டு தாமதமாக தரையிறங்கின.

இதைபோல சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து நேற்று காலை ஐதராபாத்திற்கு புறப்பட்ட ஸ்பைஜெட் விமானம் எந்திர கோளாறு காரணமாக 3 மணி நேர தாமதமாக புறப்பட்டு சென்றது.

# கிருஷ்ணகிரி பழையபேட்டை அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில் சிறப்பு வழிபாடு



கிருஷ்ணகிரி அக்.23

சிவபெருமானுக்குரிய முக்கியமான விரதங்களில் ஒன்றாக கருதப்படுவது கேதார கௌரி விரதம். இந்த விரதம் மொத்தம் 21 நாட்கள் அனுசரிக்கப்படுகிறது. புரட்டாசி மாதம் சுக்ல பட்ச தசமி திதி தொடங்கி, ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்சம் அமாவாசை வரை 21 நாட்கள் கடைப்பிடிக்கப்படுகிறது. பொதுவாக இந்த விரதத்தை பெண்கள் அனுஷ்டிக்கிறார்கள். கன்னி பெண்கள் நல்ல கணவன் கிடைக்கவும், திருமணமான பெண்கள் குடும்ப ஒற்றுமை, கணவர் நலம் வேண்டியும், கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் பிரியாமல் இருக்கவும் இந்த விரதத்தை இருப்பார்கள்.

கேதார கௌரி விரதமானது பாரம்பரியமாக 21 நாட்கள் கடைப்பிடிக்கப்படும் விரதமாக இருந்தாலும்,, உடல்நிலை மற்றும் சூழ்நிலையைப் பொறுத்து, பலர் இப்போது ஒரு நாள் அதாவது, விரதம் நிறைவு செய்யும் நாளான அமாவாசை அன்று மட்டும் விரதம் இருந்து சிவபார்வதியை வழிபடுகிறார்கள்.

அவ்வகையில் இந்த ஆண்டு கேதார கௌரி விரதம் இருந்தவர்கள் அமாவாசை தினமான இன்று (21 102025) இன்று சிறப்பு பூஜைகள் செய்து விரதத்தை நிறைவு செய்தனர். ஒரு நாள் மட்டும் விரதம் இருப்பவர்களும் இன்று விரதம் கடைப்பிடித்து சிறப்பு வழிபாடு செய்தனர்.

கேதார கவுரி விரதத்தை முன்னிட்டு, கிருஷ்ணகிரியில் உள்ள நேதாஜி ரோடு கடைவாசல் மாரியம்மன் கோவில், சென்னை சாலை பெரியமாரியம்மன் கோவில், ராசு வீதி துளுக்காணி மாரியம்மன் கோவில், ஜோதிவிநாயகர் கோவில் தெருவில் உள்ள முத்துமாரியம்மன் கோவில், பழைய சப்ஜெயில் சாலை வரசித்தி விநாயகர் கோவில்களில் பெண்கள் விரதம் இருந்து அதிரசத்தைக் கொண்டு சென்று பூஜைகள் செய்து வழிபட்டனர்.

இதேபோல்,கிருஷ்ணகிரி பழையபேட்டை அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில், 21 எண்ணிக்கை கொண்ட அதிரசம், வடை, வாழைப்பழம், பாக்கு, வெற்றிலை உள்ளிட்ட பொருட்களை வைத்து பூஜை செய்து சாமியை வணங்கி நோன்பை நிறைவு செய்தனர். கௌரி அம்மனுடன் சிவபெருமான் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதில், 500க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்றனர். இதையொட்டி சாமிக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு பஜனைப் பாடல்கள் நிகழ்ச்சி நடந்தது. இதேபோல் மாவட்டத்தில் உள்ள பல்வேறு அம்மன் கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் நடந்தன. வீடுகளில் அதிரசம் சுட்டும், சிலர் கோவில்களில் சாமிக்கு படைத்தும் வழிபட்டனர்.

# கடன் தொல்லை: மனைவி, மகன்களை அடித்துக் கொன்று தொழிலதிபர் தற்கொலை அதிர்ச்சி சம்பவம்

சென்னை அக்.23

சென்னை அருகே கடன் தொல்லையால் மனைவி மற்றும் இரண்டு மகன்களை அடித்துக் கொலை செய்துவிட்டு, தொழிலதிபர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை ஈஞ்சம்பாக்கத்தில் சிரஞ்சீவி (56 வயது) என்பவர் தனது மனைவி மற்றும்

இரண்டு மகன்களுடன் வசித்து வந்தார். தொழிலதிபரான இவர் எலக்ட்ரானிக் கடை நடத்தி வந்தார். தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தால் சிரஞ்சீவிக்கு கடன் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் கடன் தொல்லையால் அவதிப்பட்டு வந்த சிரஞ்சீவி, நேற்று இரவு மனைவி மற்றும் இரண்டு மகன்களை அடித்துக் கொலை செய்துள்ளார். பின்னர் கடன் தொல்லை காரணமாக தற்கொலை செய்து கொள்வதாக கடிதம் எழுதி வைத்துவிட்டு அவரும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அக்கம்பக்கத்தினர் அளித்த தகவலைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற நீலாங்கரை போலீசார் 4 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக ராயப்பேட்டை அரசு

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கழிவறையை பயன்படுத்த அனுமதி மறுத்த ஆம்னி பஸ்; நிறுவனத்திற்கு அபராதம் விதித்த கோர்ட்டு

சென்னை, அக்.23

சென்னை செம்பியம் பகுதியைச் சேர்ந்த சதீஷ் குமார் என்பவர், சென்னை வடக்கு நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் தாக்கல் மனுவில், 'சென்னையில் இருந்து கோவைக்கு பிரபல தனியார் பஸ் டிராவல்ஸ் மூலம் பயணம் செய்வதற்காக கடந்த மே மாதம் டிக்கெட் முன்பதிவு செய்தேன். இந்த பஸ்சில் கழிப்பறை வசதி இருப்பதாக டிராவல்ஸ் நிறுவனம் அறிவித்து இருந்தது.

ஆனால், பயணத்தின் போது கழிப்பறையை சிறுநீர் கழிக்க மட்டுமே பயன்படுத்த வேண்டும்; மலம் கழிக்க பயன்படுத்தக்கூடாது என தெரிவித்தனர். கழிப்பறை வசதி இருப்பதாக கூறி விட்டு கழிப்பறையை மலம் கழிக்க பயன்படுத்த அனுமதிக்க மறுப்பது நியாயமற்ற வர்த்தகம் ஆகும். எனவே, உரிய இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டும்' என கூறியிருந்தார். இந்த மனுவை ஆணையத்தின் தலைவர் கோபிநாத், உறுப்பினர்கள் கவிதா கண்ணன், ராமமூர்த்தி ஆகியோர் விசாரித்தனர்.

டிராவல்ஸ் நிறுவனம் தரப்பில் ஆஜராகி பதில் அளிக்கவில்லை. இதைத்தொடர்ந்து ஆணையம் பிறப்பித்த உத்தரவில், 'தவறான அறிவிப்பை வெளியிட்டு,நியாயமற்ற வர்த்தகம் மேற்கொள்வதை அனுமதிக்க முடியாது. டிராவல்ஸ் நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பின் படி, எந்தவொரு நிபந்தனையும் இன்றி கழிப்பறை வசதியை பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். இல்லையெனில், அந்த அறிவிப்பை இணையதளத்தில் இருந்து நீக்க வேண்டும். மனுதாரருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு டிராவல்ஸ் நிறுவனம் இழப்பீடாக ரூ.10 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும்' என உத்தரவிட்டது.

# 'அரிதாரத்தால் சாதிக்கலாம் என்பது பகற்கனவே' கி.வீரமணி



சென்னை, அக்.23

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:

மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள்மீது தந்தை பெரியாருக்கு அக்கறை உண்டு. தந்தை பெரியார் வெறும் படமல்ல, பாடம். எனவே அவரைப் படியுங்கள். தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டணி என்ற கற்கோட்டையில் ஓட்டை ஏதாவது விழாதா? என்ற ஏக்கத்தில் இருந்து, ஏமாற்ற அரசியலினால் நாளும் புதுப்பழி, ஆதாரமில்லாத அவதூறு பிரசாரம் செய்துவருபவர்கள், இப்படி ஒருவருக்கு, அவரது குழம்பிய மனநிலையையே தற்போதைய கூட்டணி அழைப்பு என்று போட்டிப் போட்டுக்கொண்டு அரசியல் தூண்டியலைத் தூக்கிக்கொண்டு அலைகின்றனர் பா.ஜனதா, ஆர்.எஸ்.எஸ்., அ.தி.மு.க. கூட்டணியினர்.

நடிகரின் அரிதாரம், பெரியார் பட மாலை போன்ற காட்சிகள் வெறும் காட்சிகள்தான். மீட்சிகளுக்கானவை அல்ல. சாதிக்கலாம் என்பது பகற்கனவே. சினிமா கவர்ச்சி, பல கோடி ரூபாய் பணம் மூலம் உண்மையான ஜனநாயகனாகவே முடியாது. பிறரிடம் சரண் ஆகாமல், அவரும், அவரது தோழர்களும் புரிந்துகொண்டு, திருத்திக்கொண்டு அரசியல் நடத்த வரவேண்டும். அதற்குரிய பரிபக்குவம் முதலாவது பாலபாடம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நடத்தையில் சந்தேகம்; மனைவியை கொன்று உடலை டிரம்மில் அடைத்து புதைத்த கணவர்



சென்னை, அக்.23

கும்மிடிப்பூண்டி அடுத்த எளாவூர் அருகே உள்ள துராப்பள்ளம் கிராமத்தை சேர்ந்தவர் சிலம்பரசன். பெயிண்டர். இரவது மனைவி பிரியா (வயது26). இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். பிரியாவின் நடத்தையில் சிலம்பரசனுக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதனால் கணவன் மனைவியிடையே தகராறு ஏற்பட்டு வந்தது. இதனால் கோபம் அடையும் பிரியா அடிக்கடி பெரியபாளையம் அடுத்த ஆரணி அருகே உள்ள புதுப்பாளையத்தில் உள்ள பெற்றோர் வீட்டிற்கு செல்வதும் பின்னர் சமாதானம் அடைந்து கணவருடன் சேர்ந்து குடும்பம் நடத்தியும் வந்தார்.

இந்த நிலையில் கடந்த 2 மாதமாக பிரியா தனது பெற்றோருடன் எந்த தொடர்பும் இல்லாமல் இருந்தார். இதற்கிடையே 2 நாட்களுக்கு முன்பு பிரியாவின் தந்தை சீனிவாசன் மகளை பார்ப்பதற்காக துராப் பள்ளம் கிராமத்தில் உள்ள வீட்டுக்கு வந்தார். அப்போது மகள் அங்கு இல்லை. இதுபற்றி மருமகன் சிலம்பரசனிடம் கேட்ட போது பிரியா வெளியில் சென்று விட்டதாக கூறி சமாளித்தார். மேலும் பேரன்களும் தனது தாய் கடந்த 2 மாதமாக வீட்டில் இல்லை என்று தெரிவித்தனர்.

இதனால் சந்தேகம் அடைந்த சீனிவாசன் தனது மகள் பிரியா மாயமானது குறித்து ஆரம்பாக்கம் போலீசில் புகார் செய்தார். போலீசார் சிலம்பரசனிடம் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர். அப்போது அவர் கடந்த ஆகஸ்டு மாதம் 14ந்தேதி இரவு மனைவி பிரியாவுடன் ஏற்பட்ட தகராறில் அவரை கழுத்தை நெரித்து கொன்று விட்டதாக தெரிவித்தார்.

மேலும் உடலை டிரம்மில் அடைத்து மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்று சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஏழு கண் பாலத்தை ஒட்டிய சுடுகாட்டின் அருகே புதைத்து விட்டதாக கூறினார். இதையடுத்து சிலம்பரசனை போலீசார் கைது செய்தனர். அவரிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

கடந்த 2 மாதத்திற்கு முன்பு பிரியா கணவருடன் ஏற்பட்ட தகராறில் பெற்றோர் வீடான புதுப்பாளையத்திற்கு வந்தார். அங்கு பெற்றோர் சமாதான பேச்சுவார்த்தை நடத்தி கணவர் வீட்டுக்கு அனுப்பி வைத்து உள்ளனர். இதன் பின்னர் நடத்தை சந்தேகத்தில் மீண்டும் ஏற்பட்ட தகராறில் சிலம்பரசன் தனது மனைவி பிரியாவை கழுத்தை நெரித்து கொன்று உடலை சுடுகாடு அருகே புதைத்து இருப்பது தெரியவந்தது. கடந்த 2 மாதமாக சிலம்பரசன் எதுவும் தெரியாதது போல் சகஜமாக இருந்து உள்ளார். அவர் ஒருவரால் உடலை கொண்டு சென்று புதைத்து இருக்க முடியுமா? என்று போலீசார் சந்தேகிக்கிறார்கள். இதனால் அவருக்கு வேறு யாரேனும் உதவினார்களா? என்ற கோணத்திலும் விசாரணை நடந்து வருகிறது. பிரியா உடல் புதைக்கப்பட்ட இடத்தில் (செவ்வாய்) கும்மிடிப்பூண்டி தாசில்தார் முன்னிலையில் ஆரம்பாக்கம் போலீசார் உடலை தோண்டி எடுக்க திட்டமிட்டு உள்ளனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மேட்டூர் அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு 35 ஆயிரம் கன அடியாக அதிகரிப்பு



சேலம், அக்.23

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை கடந்த 16ந்தேதி தொடங்கி பல்வேறு நகரங்களிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், அணைகள், ஏரிகள் உள்ளிட்ட நீர் நிலைகள் விரைவாக நிரம்பி வருகின்றன. காவிரியில் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து, சேலம் மேட்டூர் அணையில் நீர் வரத்து அதிகரித்து காணப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக, டெல்டா பாசனத்திற்கு 22 ஆயிரம் கன அடியும்,16 கண் மதகுகள் வழியாக 12,500 கன அடியும், கால்வாய்கள் வழியே 500 கன அடி நீரும் என மொத்தம் 35 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றம் செய்யப்படுகிறது.

மேட்டூர் அணையில் இருந்து நீர் வெளியேற்றம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், இதற்கேற்ப திருச்சி முக்கொம்பு மேலணைக்கு நீர் திறப்பு அளவும் இருக்கும் என நீர்வளத்துறை தெரிவித்து உள்ளது. தற்போது மேலணைக்கு நீர் வரத்து 14 ஆயிரம் கன அடியாக உள்ளது. மேட்டூர் அணை நடப்பு ஆண்டில் 7வது முறையாக முழு கொள்ளளவை எட்டியுள்ளது.

# கன்னியாகுமரி: கால்வாயில் கார் கவிழ்ந்து விபத்து டிரைவர் காயம்



கன்னியாகுமரி அக்.23

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாத்தூர் தொட்டிப்பாலம் புகழ் பெற்ற சுற்றுலா தலமாக திகழ்கிறது. இங்கு தினமும் நூற்றுக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.

இந்நிலையில், மாத்தூர் தொட்டிப்பாலம் அருகே இன்று கால்வாய்க்குள் கார் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. தொட்டிப்பாலம் அருகே காரை ரிவர்ஸ் எடுக்க முயன்றபோது கால்வாய்க்குள் கார் தலைகுப்புற கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் கார் டிரைவர் காயமடைந்தார்.

தடுப்புச்சுவர் இல்லாத பகுதியில் பார்க்கிங் செய்திருந்த நிலையில் காரை எடுக்கும்போது எதிர்பாராதவிதமாக பின்னோக்கி சென்று கால்வாயில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதையடுத்து, காயமடைந்த கார் டிரைவர் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தின கனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

23.10.2025

# கழுகுமலை கழுகாசலமூர்த்தி கோவிலில் கந்த சஷ்டி திருவிழா: 27ம் தேதி சூரசம்ஹாரம்



தூத்துக்குடி அக்.23

தமிழகத்தின் தென் பழனி என்றழைக்கப்படும் கழுகு மலை கழுகாசலமூர்த்தி குட வரை கோவிலில் ஆண்டு தோறும்கந்தசஷ்டி திருவிழா 10 நாட்கள் சிறப்பாக நடை பெறும். இந்த ஆண்டு திரு விழா நாளை (22.10.2025) தொடங்கி அடுத்த மாதம் 1ம் தேதி வரை (1.11.2025) நடைபெறுகிறது.

நாளை காலை 5 மணிக்கு கோவில்நடைதிறக்கப்பட்டு 6 மணிக்கு திருவனந்தல் பூஜை, விளா பூஜை மற்றும் காலசந்தி பூஜை கள் நடைபெறும். அதை தொடர்ந்து 7 மணி யளவில் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடக்கிறது.

விழா நாட்களில் தினமும் காலை மாலை யில் சுவாமி, வள்ளி தெய்வானையுடன் பல் வேறு வாகனங்களில் வீதியுலா வந்து பக்தர் களுக்கு காட்சியளிக்கின்றார். 26ம் தேதி சூரனின் தம்பி தாரகாசுரனை முருகப்பெருமான் வதம் செய்யும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்நிகழ்வு கழுகுமலை திருத்தலத்தில் மட்டுமே நடைபெறும். வேறு எந்த திருத்தலத்திலும் நடைபெறாது.

விழாவின் சிகர நிகழ்வான சூரசம்ஹாரம் 27ம் தேதி (திங்கள் கிழமை) நடைபெறுகி றது. இதையொட்டி அன்று காலை 12 மணிக்கு கோவிலில் சண்முகர் அர்ச்சனை வழிபாடு நடைபெறும். தொடர்ந்து மாலை 4.30 மணியளவில் சுவாமி வீரவேல் ஏந்தி வெள்ளி மயில் வாகனத்தில் எழுந்தருளி போர்க்களத்திற்கு வரும் நிகழ்ச்சி நடக்கி றது. பின்னர் மாலை 5 மணியளவில் சூரசம் ஹாரம் நிகழ்ச்சி நடைபெறுகிறது. கழுகு மலை மட்டுமன்றி சுற்றியுள்ள சுமார் 20 க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த ஏரா ளமான பக்தர்கள் விழாவில் கலந்து கொள் கின்றனர்.

தொடர்ந்து இரவு 7 மணியளவில் கோவில் சீர்பாதம் தாங்கிகள் சார்பில் முருகப்பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனை நடைபெறும். 29ம் தேதி இரவு 7 மணியளவில் சுவாமி, வள்ளி தெய்வா னையுடன் வசந்த மண்டபத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். 30 ம் தேதி இரவு 7 மணியளவில் திருக்கல்யாணம் நிகழ்ச்சியும், 31 ம் தேதி பட்டின் பிரவேசம் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. அடுத்த மாதம் நவம்பர் 1 ம் தேதி இரவு 7 மணிக்கு மஞ்சள் நீராட்டு விழாவுடன் கந்த சஷ்டி விழா நிறைவு பெறுகிறது. இதற்கான ஏற்பா டுகளை கோவில் நிர்வாக அதிகாரி கார்த்தீஸ் வரன் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

# சிறுவாபுரி பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் கந்த சஷ்டி விழா



திருவள்ளூர், அக்.23

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம் பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரியில் பிரசித்தி பெற்ற பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது. இத்திருக்கோவிலுக்கு தொடர்ந்து ஆறு வாரங்கள் வந்து நெய் தீபம் ஏற்றி வழிபட்டால் வேண்டுதல்கள் நிறைவே றும் என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக உள்ளது.

இத்திருக்கோவிலில் மகா கந்த சஷ்டி விழா சிறப்பாக நடைபெறும். அவ்வகையில் இந்த ஆண்டுக்கான கந்த சஷ்டி விழா இன்று தொடங்கியது. நேற்று மாலை விநாயகர் பூஜை, வாஸ்து சாந்தி உள்ளிட்டவைகளுடன் மகா கந்த சஷ்டி உற்சவ நிகழ்ச்சிகள் துவங்கின. இன்று காலையில் கொடியேற்றும் நிகழ்ச்சியும், சுவாமி பிரகார புறப்பாடும் நடைபெற்றது. மாலையில் யாகசாலை பூஜையுடன் ரக்ஷா பந்தனம். சுவாமி பிரகார புறப்பாடு உள்ளிட்டவை நடை பெறுகின்றன. வியாழக்கிழமை காலை 2ம் காலை யாக சாலை பூஜைகளும், சுவாமி உள் பிரகார புறப்பாடும் மாலை 3ம் கால யாகசாலை பூஜைகளும், சுவாமி உள் பிரகார புறப் பாடும் நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமை காலை 4ம் கால யாகசாலை பூஜைகள், சுவாமி உள்பிரகார புறப்பாடும் மாலை 5ம் கால யாகசாலை பூஜைகள், சுவாமி உள் பிரகார புறப்பாடு உள்ளிட்டவை நடைபெறுகின்றன.

சனிக்கிழமை காலை 6ம் கால யாகசாலை பூஜைகளும், சுவாமி உள்பிரகார புறப்பாடும், காலை 11 மணிக்கு ஸ்ரீசண் முகர் சத்ருசம்ஹாரதிரிசதி புஷ்பார்ச்சனை, மாலை 5.30 மணி முதல் 7ம் கால யாகசாலை பூஜைகளும், சாமி உள்பி ரகார புறப்பாடும் நடைபெறுகின்றன. ஞாயிற்றுக்கிழமை காலை 8ம் கால யாகசாலை பூஜைகளும், சாமி உள் பிரகார புறப்பாடும், மாலை 4 மணிக்கு வேல் வாங்கும் விழாவும், 6 மணிக்கு 9ம் கால யாகசாலை பூஜைகளும், சுவாமி உள் பிரகார புறப்பாடும் நடைபெறுகின்றன. 27ம் தேதி திங்கட் கிழமை காலை 10ம் கால யாகசாலை பூஜை, கலச பூஜை, பூர்ணாஹூதி கலச அபிஷேகம் நடைபெறுகிறது. விழா வின் சிகர நிகழ்வான சூரசம்ஹார நிகழ்ச்சி மாலை 4 மணிக்கு நடைபெற உள்ளது. இதில் பல்லாயிரக்கணக் கான பக்தர்கள் கலந்துகொண்டு முருகப்பெருமானை தரிச னம் செய்கின்றனர். அதன்பின், சுவாமி புறப்பாடு நடைபெ றுகிறது. இரவு 7 மணிக்கு கொடி இறக்கும் நிகழ்ச்சியும், சுவாமி உள் பிரகார புறப்பாடும் நடைபெறுகிறது.

மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை அபிஷேகமும், சந் தன காப்பும் நடைபெறுகிறது. மாலை 6 மணிக்கு சுவா மிக்கு திருக்கல்யாணமும், இரவு 8 மணிக்கு மங்கள வாத் தியம் முழங்க வாணவேடிக்கையுடன் சுவாமி திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருக்கோவில் செயல் அலுவலர் மாதவன் தலைமையில் ஊழியர்களும், பணியாளர்களும் செய்து வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் (23.10.2025)

**மேஷம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும் நாள். நண்பர்களிடம் இருந்து ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சிறிய லாபம் உண்டு.

**ரிஷபம்:** உழைப்புக்குஏற்றபலன்கிடைக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். செலவுகள்கட்டுப்பாட்டில் இருக்கும்.

**மிதுனம்:** சில எதிர்பாராத தடை ஏற்பட்டாலும் அதைக் கடந்து முன்னேறுவீர்கள். நண்பர்கள் உங்களை ஊக்குவிப்பர்.

**கடகம்:** வீட்டு வேலைகளில் அதிக ஈடுபாடு. உடல் சோர்வு இருந்தாலும் மனநிம்மதி உண்டு. புதிய உறவு உருவாக வாய்ப்பு.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள், சாதனை உங்கள் பக்கம். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

**கன்னி:** நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும் நாள். சொத்து சம்பந்தமான விவகாரத்தில் நல்ல முடிவு.

**துலாம்:** புதிய வாய்ப்புகள் வரலாம். அதிர்ஷ்டம் உங்களுடன் இருக்கும். நண்பர்கள் நம்பிக்கையுடன் நடப்பர்.

**விருச்சிகம்:** உடல்நலம் கவனிக்க வேண்டிய நாள். உறவினர்களிடம் நிதானமாக பேசுங்கள். பொறுமைதேவை.

**தனுசு:** வெளிநாட்டுச் செய்தி உங்களை மகிழ்விக்கும். கல்வியில் முன்னேற்றம். தொழிலில் புதிய வாய்ப்பு.

**மகரம்:** அழுத்தமான பணி இருந்தாலும் மனநிம்மதி உண்டு. குடும்பத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சி தொடங்க சிறந்த நாள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. எதிரிகள் விலகுவர்.

**மீனம்:** மன அமைதி பெறுவீர்கள். உறவினர்கள் மதிப்புடன் நடப்பர். நீண்டநாள் குழப்பம் தீரும்.

# செம்பரம்பாக்கம், பூண்டி ஏரிகளில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு அதிகரிப்பு

சென்னை, அக்.23

வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ள நிலையில், தமிழகத்தில் கனமழை பெய்து வருகிறது. தலைநகர் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களிலும் மழை வெளுத்து வாங்கி வருகிறது. இதனால், ஏரிகளுக்கு வரும் நீரின் அளவு அதிகரித்து வருகிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏரிகளின் உபரி நீர் திறக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து திறக்கப்படும் உபரி நீரின் அளவு 500 கன அடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

நீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதால் அடையாறு கரையோரம் வசிக்கும் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நேற்று முதல் வினாடிக்கு 100 கன அடி நீர் திறக்கப்பட்ட நிலையில், தொடர்ந்து மழை பெய்து வருவதால் உபரி நீரின் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேபோல், திருவள்ளூர் பூண்டி ஏரியில் இருந்து திறக்கப்படும் உபரி நீரின் அளவு வினாடிக்கு 4,500 கன அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. வினாடிக்கு 2 ஆயிரம் கன அடியாக நீர் திறக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது படிப்படியாக உயர்த்தப்பட்டு 4,500 கன அடி திறக்கப்படுகிறது. இதன் காரணமாக கொசஸ்தலை ஆற்றின் கரையோர மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# உலக மக்களின் நலன் வேண்டி சாணார்பட்டி அருகே அமாவாசை யாகம்



திண்டுக்கல் அக்.23

திண்டுக்கல் மாவட்டம் சாணார் பட்டி அருகே மேட்டுக்கடை மல்லத் தான் பாறையில் ஆதி பரஞ்சோதி சக லோக சபை உள்ளது. இந்த சபை சார்பாக, உலக மக்களின் நலன் வேண்டி ஐப்பசி மாத அமாவாசையை முன்னிட்டு மகா பிரத்யங்கரா தேவி யாகபூஜை நடைபெற்றது.

இந்த யாக பூஜையை ஆதி பரஞ் சோதி சகலோக சபை நிர்வாகி திரு வேங்கட ஜோதி பட்டாச்சாரியார் தலைமை தாங்கி நடத்தி வைத்தார். இதையொட்டி பிரத்யங்கரா தேவி அம்மன் மற்றும் நரசிங்க பெருமாளுக்கு பூக்களால் அலங்காரம் செய் யப்பட்டது. பின்னர் யாககுண்டத்தில் மிள காய் வற்றல் கொட்டப்பட்டு வேத மந்திரங் கள் முழங்க யாக பூஜை நடத்தப்பட்டது.

இதில் திண்டுக்கல், தேனி, மதுரை, சிவ கங்கை, சேலம், கோவை, திருப்பூர், கமுதி, உடுமலைப்பேட்டை, சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த ஏராள மான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிச னம் செய்தனர். மேலும் வெளிநாட்டு பக்தர் கள் இணையதளம் வழியாக பூஜையில் பங்கேற்றனர். பூஜையில் நேரடியாக கலந்து கொண்ட பக்தர்கள் தங்களது வேண்டுதல் களை காகிதத்தில் எழுதி அதனை அக்னி குண்டத்தில் போட்டு வேண்டிக்கொண் டனர்.

இந்த பூஜையினால் வியாபார வளர்ச்சி, செல்வ செழிப்பு, குடும்ப அமைதி, திரும ணம், குழந்தை பாக்கியம் கிடைக்கும் என் பது நம்பிக்கை.

யாக பூஜைக்கு முன்னதாக கோசாலை யில் வளர்க்கப்பட்டு வரும் சுமார் 100க்கும் மேற்பட்ட நாட்டு மாடுகளுக்கு அகத்திக் கீரை வழங்கப்பட்டு அமாவாசை கோபூஜை நடந்தது.

## 'லோகா படத்தை தெலுங்கில் எடுத்திருந்தால், தோல்வியடைந்திருக்கும்' பிரபல தயாரிப்பாளர்




பிரபல தயாரிப்பாளர் நாக வம்சி தனது கருத்துக்களை வெளிப்படையாக பேசுவதற்கு பெயர் பெற்றவர். அதனால்தான் சிலருக்கு அவரைப் பிடிக்கும், சிலருக்குப் பிடிக்காது. தற்போது ரவி தேஜாவின் மாஸ் ஜாதராவின் பிரமோஷனின்போது, அவர் ஒன்றல்ல, பல கருத்துகளை கூறினார். அவை இப்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

அவர்கூறுகையில், "இந்தகருத்துக்காகமக்கள்என்னைகண்டிப்பாகதிட்டுவார்கள் என்பது எனக்குத் தெரியும். லோகா தெலுங்கில் எடுக்கப்பட்டிருந்தால் மக்கள் பல குறைகள் சொல்லி இருப்பார்கள். நிச்சயமாக படத்தை தோல்வியடையச் செய்திருப்பார்கள்'' என்றார்.

சுவாரஸ்யமாக, கல்யாணி பிரியதர்ஷன் நடித்த இந்த படத்தை தெலுங்கில் தனது சித்தாரா என்டர்டெயின்மென்ட்ஸ் பேனர் மூலம் வெளியிட்டார் நாக வம்சி. அங்கு நல்ல வரவேற்பை பெற்றது குறிப்பிடத்தக்கது.

## 'பெண்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்' ரஷ்மிகா மந்தனா |



ரஷ்மிகா மந்தனா தற்போது பான் இந்திய படங்களில் நடித்து முன்னணி கதாநாயகியாக உள்ளார். சமீபத்தில், புஷ்பா 2 மற்றும் சாவா திரைப்படத்தின்மூலம்பிளாக்பஸ்டர்வெற்றிகளை பெற்ற இவர் இப்போது பெரிய ஹீரோக்களுடன் படங்களில் நடித்து வருகிறார். தமிழ் மற்றும் தெலுங்கு படங்களுடன் இந்தியிலும் தனது பலத்தைக் காட்டி வருகிறார்.

தற்போது இந்தியில் தம்மா என்ற படத்தில் நடித்திருக்கிறார். ஆதித்யா சர்போத்தர் இயக்கி உள்ள இந்த ஹாரர் காமெடி திரில்லர் படம் நேற்று திரைக்கு வந்தது.

மேலும், ராஷ்மிகா 'தி கேர்ள்பிரெண்ட் 'என்ற படத்திலும் நடித்துள்ளார். சமீபத்தில், அந்த படத்தின் புரமோஷனின்போது ராஷ்மிகா காதல் முறிவு குறித்து சுவாரஸ்யமான கருத்துக்களை பகிர்ந்தார். ஒரு நேர்காணலில், ராஷ்மிகா பிரிந்ததைப் பற்றி பேசினார்.

காதல் முறிவால் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்று ராஷ்மிகா மந்தனா கூறினார். அவர் கூறுகையில், 'காதல் முறிவால் பெண்களை விட ஆண்கள்தான் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள் என்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. எங்கள் வலியை வெளிப்படுத்த உங்களைப் போல தாடி வளர்க்க முடியாது. மது குடிக்க முடியாது. பெண்கள் உள்ளே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் அதை வெளியே காட்ட முடியாது' என்றார். இந்தக் கருத்துக்கள் இப்போது வைரலாகி வருகின்றன.

## மகேஷ் பாபு, ஜூனியர் என்.டி.ஆர், ராம் சரணை வைத்து படம் எடுத்த ஒரே இயக்குனர்...யார் தெரியுமா?



இப்போது தெலுங்கு ஹீரோக்கள் பான் இந்திய படங்களில் நடிக்க ஆர்வம் காட்டி வருகின்றனர். மகேஷ் பாபு ராஜமவுலி இயக்கத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு வேகமாக நடந்து வருகிறது. மேலும், ராம் சரண் புச்சி பாபு இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கிறார். இது பான் இந்திய படமாக உருவாகிறது.

அதேபோல், பிரசாந்த் நீல் இயக்கத்தில் ஜூனியர் என்.டி.ஆர் ஒரு படத்தில்நடிக்கிறார்..இந்தபடமும்பான்இந்தியபடமாகஉருவாகிறது. மேலும், முன்னணி நடிகர் வெங்கடேஷ் இளம் ஹீரோக்களுடன் போட்டியிட்டு படம் நடித்து வருகிறார்.

இதற்கிடையில், மகேஷ் பாபு, ஜூனியர் என்.டி.ஆர், ராம் சரண் மற்றும் வெங்கடேஷ் ஆகிய 4 ஹீரோக்களின் படங்களையும் ஒரு இயக்குனர் இயக்கி இருக்கிறார். அது யார் தெரியுமா?. அவர் வேறு யாருமல்ல, ஒரு காலத்தில் சூப்பர் ஹிட் படங்களுக்குப் பெயர் போன ஸ்ரீனு வைட்லாதான். ஒரு காலத்தில் ஸ்ரீனு வைட்லாவின் படங்களுக்கு மிகப்பெரிய கிராஸ் இருந்தது.

தற்போது, அவர் படங்களில் இருந்து ஒரு இடைவெளி எடுத்துள்ளார். ஸ்ரீனு வைட்லா மகேஷ் பாபுவுடன் தூக்குடு மற்றும் ஆகடு போன்ற படங்களையும், ஜூனியர் என்டிஆருடன் பாட்ஷா, வெங்கடேஷுடன் நமோ வெங்கடேசாயா, ராம் சரணுடன் புரூஸ் லீ போன்ற படங்களையும் இயக்கியுள்ளார். இறுதியாக, அவர் கோபிசந்துடன் ஒரு படத்தை இயக்கினார்.

## மகளிர் உலகக்கோப்பை: டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பந்துவீச்சு தேர்வு

13வது மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும். ஏற்கனவே ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா ஆகிய 3 அணிகள் அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றுவிட்டன.

இந்நிலையில், இந்த தொடரில் இன்று நடைபெறும் லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா இங்கிலாந்து அணிகள் மோத உள்ளன. இரு அணிகளும் ஏற்கனவே அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றுவிட்டன. இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்று வெற்றிப்பயணத்தை தொடர இரு அணிகளும் கடுமையாக போராடும்.

இதனால் ஆட்டத்தில் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்காது. இதையடுத்து இந்த போட்டிக்கான டாஸ் சுண்டப்பட்டது. இதில் டாசில் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பந்துவீசுவதாக அறிவித்துள்ளது.

## ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறை.. வித்தியாசமான சாதனை படைத்த வெஸ்ட் இண்டீஸ்



வங்காளதேசம் சென்றுள்ள வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணி 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் வங்காளதேசம் வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2வது ஒருநாள் போட்டி மிர்புரில் நேற்று நடந்தது.

இதில் 'டாஸ்' ஜெயித்து முதலில் ஆடிய வங்காளதேச அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 213 ரன்கள் அடித்தது. அதிகபட்சமாக சவுமியா சர்கார் 45 ரன்னும், ரிஷாத் ஹூசைன் 39 ரன்னும், மெஹிதி ஹசன் மிராஸ் 32 ரன்னும் எடுத்தனர். வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் குடகேஷ் மோட்டி 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

பின்னர் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் அணியும் 50 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுக்கு 213 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக கேப்டன் ஷாய் ஹோப் ஆட்டமிழக்காமல் 53 ரன்கள் சேர்த்தார். வங்காளதேசம் தரப்பில் ரிஷாத் ஹூசைன் 3 விக்கெட் கைப்பற்றினார்.

ஆட்டம் சமனில் முடிந்ததால் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்க சூப்பர் ஓவர் முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் முதலில் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் அணி சூப்பர் ஓவரில் ஒரு விக்கெட்டுக்கு 10 ரன்கள் எடுத்தது. அடுத்து ஆடிய வங்காளதேச அணி 6 பந்துகளில் ஒரு விக்கெட்டுக்கு 9 ரன்களே எடுத்தது. இதனால் வெஸ்ட் இண்டீஸ் அணி வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் வெஸ்ட் இண்டீஸ் அணி தரப்பில் 50 ஓவர்களையும் சுழற்பந்து வீச்சாளர்களான அகீல் ஹொசைன், ரோஸ்டன் சேஸ், காரி பியர், குடகேஷ் மோட்டி மற்றும் அலிக் அதனேஸ் ஆகியோரே வீசினர் (தலா 10 ஓவர்கள்). இதன் மூலம் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் 50 ஓவர்களையும் சுழற்பந்து வீச்சாளர்களை வைத்து வீசிய முதல் அணி என்ற வித்தியாசமான சாதனையை வெஸ்ட் இண்டீஸ் படைத்துள்ளது.

## கேரளா: தடகள போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற கன்னியாஸ்திரி



கேரள மாநிலம் வயநாடு துவாரகா ஏ.யு.பி. பள்ளியில், 55 வயதான கன்னியாஸ்திரி சபீனா உடற்கல்வி ஆசிரியராக பணியாற்றி வருகிறார். இவர் சமீபத்தில் நடைபெற்ற மாநில அளவிலான மாஸ்டர்ஸ் தடகள போட்டியில், 55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடை தாண்டுதல் போட்டியில் கலந்து கொண்டார். இந்த போட்டியில் மற்ற வீரர்களை விட மின்னல் வேகத்தில் முந்தி சென்று வெற்றி பெற்ற கன்னியாஸ்திரி சபீனா, தங்கப் பதக்கத்தை வென்று அசத்தினார்.

சிறுவயதில் இருந்தே விளையாட்டில் ஆர்வம் கொண்டவராக இருந்த கன்னியாஸ்திரி சபீனா, 9ம் வகுப்பில் தேசிய தடை தாண்டும் போட்டி, உள்ளிட்டபல்வேறுபோட்டிகளில்பங்கேற்றுபலபதக்கங்களைவென்றுள்ளார். அடுத்த ஆண்டு உடற்கல்வி ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வு பெற உள்ளதால், இறுதியாக ஒருமுறை தடகள போட்டியில் பங்கேற்க வேண்டும் என்று விரும்பியதாகவும், அதற்காகவே மாநில மாஸ்டர்ஸ் தடகள போட்டியில் கலந்து கொண்டதாகவும் கன்னியாஸ்திரி சபீனா தெரிவித்துள்ளார்.

## ஐ.சி.சி. தரவரிசை: இந்திய வீராங்கனை தீப்தி ஷர்மா முன்னேற்றம்

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) ஒருநாள் போட்டி வீராங்கனைகளின் புதிய தரவரிசை பட்டியலை நேற்று வெளியிட்டது. இதன்படி பேட்டர்கள் தரவரிசையில் இந்திய வீராங்கனை ஸ்மிர்தி மந்தனா (809 புள்ளி) முதலிடத்திலும், இங்கிலாந்து கேப்டன் நாட் சிவெர் (726 புள்ளி) 2வது இடத்திலும் தொடர்கின்றனர்.

ஆஸ்திரேலிய அணியின் கேப்டன் அலிசா ஹீலி (718 புள்ளி) ஒரு இடம் முன்னேறி, சக நாட்டவரான பெத் மூனியுடன் (718) 3வது இடத்தை பகிர்ந்துள்ளார். இந்திய அணியின் கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் (619) 3 இடம் அதிகரித்து 15வது இடத்தில் இருக்கிறார்.

இதன் பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் இங்கிலாந்தின் சோபி எக்லெஸ்டோன் (778), ஆஸ்திரேலியாவின் ஆஷ்லி கார்ட்னர் (686) முறையே முதல் இரு இடத்தில் நீடிக்கின்றனர். இந்திய சுழற்பந்து வீச்சாளர் தீப்தி ஷர்மா (669) 3 இடம் ஏற்றம் கண்டு 3வது இடத்தை பிடித்துள்ளார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tirupur - 638751. Editor: KANI RAJA V.